கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் பெண்ணியம்

நா. செய்யதலி பாத்திமா, **M.A., M.Phil**
பதிவு எண்.. 21222014022015
பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி, தூத்துக்குடி

முனைவர் சு.மேரி சுபா செல்வராணி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுமையம்
ஏ.பி.சி மகாலெச்சுமி கல்லூரி தூத்துக்குடி

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6445

முன்னுரை

இறைவன் படைப்பில் ஆணும், பெண்ணும் சமமான உயிர்களாகும், பெண் படைப்புகளிலுள்ள பெண் பற்றிய சொல்லாடல்கள், கருத்தாக்கங்கள், பெண்களின் எழுத்து வடிவம், நடையமைதி, கருத்து வெளிப்படும் திறன் போன்றவற்றை ஆராயும் போக்கில் பெண்ணிய இலக்கியத் திறனாய்வுகள் உள்ளது. கி.ராஜநாராயணன் கதைகளில் பெண்களுக்கென்று தனி இடம் உண்டு. பெண்ணுலகம் தனி உலகம் அந்த உலகத்திற்குள் நுழைந்து, அதில் வெற்றியும் பெற்றுள்ளார். கி.ரா அவர்களின் பல சிறுகதைகள் பெண்களை மையமிட்டே எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் பல்வேறு விதமான பெண்களின் மனநிலையினை எடுத்துக் காட்டியுள்ளார். அவர் பெண்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர் கன்னிமை, வேலை – வேலையே வாழ்க்கை, பேதை ஆகிய சிறுகதைகளில் வரும் பெண்களை ஆராயும் போக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

பெண்ணியம்

"Feminism" என்ற ஆங்கிலச் சொல் "Femina" என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபு ஆகும். பெண் என்னும் சொல் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்று பொருள்படும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் பண்புகளைக் குறிக்கவே பயன்பட்டு வந்தது. பின்பே பெண்களில் உரிமையைப் பேசுவதற்காகக் குறிப்பிடப்பட்டது.[1]"

"கார்டன் என்பவர் பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்றார்.[2]"

"புட்சர் என்பவர் பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் என்றார்.[3]"

பெண்ணியம் ஆணுக்கு எதிரானதோ, ஆணை ஒதுக்கியதோ அன்று. அதற்கு மாறாக ஆணுக்குத் துணைபுரிவது. ஆணும் பெண்ணும் சமத்துவத்துடன் இசைந்து இணைந்து வாழ்வதாகும். அவ்வாறான வாழ்வில் எல்லா நலன்களும் பெறுவதாகும்.

கன்னிமை

கன்னிமை சிறுகதையில் வரும் நாச்சியார் கன்னிப் பெண்ணாக இருந்த போது தாய் உள்ளம் கொண்டவளாக, வீட்டிற்கு வரும் ஒவ்வொரு மனிதரையும் உபசரிக்கிறாள்.

தாய்வழிச் சமூக அமைப்பில் பெண்ணுக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டது போல் கன்னிமை கதையில் நாச்சியாருக்கும் கொடுக்கப்பட்டது. சமுதாயத்தின் ஆக்கப் பணிகளிளெல்லாம் நாச்சியார் முக்கிய இடம் பெற்றிருந்தாள் என அறிய முடிகிறது.

> **"வேலைக்காரர்களுக்கு மட்டுமில்லை, பிச்சைக்காரர்களுக்குக் கூட நாச்சியாரம்மா என்றால் குலதெய்வம் தான்.[4]"**

தாய்த் தெய்வ வழிபாடு மிகத் தொன்மையானது. தமிழ் இலக்கியத்தில் "கொற்றவை" வழிபாடு தாய்த் தெய்வத்தின் சிறப்பை அறிய உதவுகிறது.

கி.ரா அவர்களும், நாச்சியார் கதாபாத்திரத்தை தெய்வத்திற்கு இணையாக பெண்ணிய கருத்தாக்கத்தைப் பயன்படுத்தி உள்ளார். நாச்சியார் குடும்பம் எனும் வலைக்குள் மாட்டிக் கொண்டதால் பிறர் மீது இருந்த அன்பு குறைந்து விட்டது. கன்னிமை என்பதற்கு இக்கதை ஒரு புதிய பொருள் தந்துள்ளது. திருமணத்திற்கு முன்பு இருந்த தாய் உள்ளம். திருமணத்திற்கு பிறகு தொடர முடியவில்லை என்பதை இக்கதையின் மூலம் உணர்த்துகிறார் கி.ரா.அவர்கள்.

வேலை - வேலையே வாழ்க்கை

கன்னிமை சிறுகதையில் வரும் நாச்சியார் கதாபாத்திரம் போலவே, வேலை - வேலையே வாழ்க்கை சிறுகதையில் வரும் கெங்கம்மாவும் காணப்படுகிறாள். ஆனால் கெங்கம்மா திருமணமானவள். கெங்கம்மாவுக்கு அதிகாலை எழுந்ததில் இருந்து இரவு தூங்குவது வரைக்கும் வேலை தான். அவள் எந்த இடத்திலும் தன் முகத்தை சுழித்ததே இல்லை. பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள் என்று சொல்லி விட முடியாது. கெங்கம்மா செய்கிற வேலையை விட கெங்கம்மாவின் கணவர் நாகையா செய்யும் வேலை குறைவு தான். பெண்கள் வலிமையானவர்கள் என்பதை கி.ராஜநாராயணன் தன்னுடைய கதையில் அழுத்தமாக சொல்லி இருக்கிறார்.

"புருசன் பக்கத்தில் வந்து படுக்கையை விரித்தாள். லாந்தரை சுருக்குவதற்கு முன் நாகையா அவளை ஒரு தரம் பார்த்தார். அந்த முகத்தில் துளிகூட களைப்போ ஆயாசமோ இல்லை"[5] என்ற வரிகள் மூலமாக கரிசல்காட்டு பெண்கள் அந்த மண்ணை போலவே வலிமையானவர்கள் என்பதை உணர்த்துகிறார் கி.ரா.

கணவன் துன்பமான வேளையில் இருக்கும் போது, மனைவியானவள் விடுங்க பார்த்து விடலாம் என்று சுலபமாக சொல்வாள். அது தான் பெண் மனம்.

நாம் வாழ்க்கை வேறு, வேலை வேறு என்று எண்ணுகிறோம். ஆனால் கெங்கம்மா வேலையே வாழ்க்கையாக விளங்குகிறாள்.

"கணவன் மனைவியை முகர்ந்த போது, அவளிடம் இருந்து புசுப்பொடியோ, சோப்பு வாடையோ எதுவும் இல்லை. தனி மனுசி வாடை தான் அவளிடம் இருந்தது"[6] என்பதன் மூலம் புற அழகை விட ஒரு பெண்ணின் அக அழகே சிறந்தது என்பதை கெங்கம்மாவின் வழியாக தெளிவுபடுத்து கிறார் கி.ராஜநாராயணன்.

பேதை

தமிழில் பெண்ணின் ஏழுவகை பருவங்களை கலிவெண்பா கூறுகிறது. அதில் முதலாவதாக வரும் பேதை பருவம் என்னும் 12 வயது வரை உள்ள பெண்ணை குறிக்கிறது. பேதை என்பதற்கு எதையும் பகுத்தறிந்து பார்த்து செயல்படத் தெரியாத தன்மை என இலக்கியங்கள் குறிப்பிடுகிறது.

"பேதை" என்னும் சிறுகதையில் வரும் பேச்சி பருத்தி எடுக்க வரும் வலைசக் காரர்களில் ஒருத்தி. பேச்சியை அந்த ஊர் மக்கள் எதிரிலேயே "ஏ-கோட்டிக் கழுதை" என்று

தான் கூப்பிடுவார்கள். பார்வதி அம்மன் கோவிலுக்கு முன் இருந்த வேப்பமர நிழலில் பேச்சி படுத்திருந்தாள். பேதையாக இருந்து தன்னை இழந்து குழந்தைக்கு தாயாகிறாள். குழந்தையை வைத்து தந்தை யாராக இருக்குமன்று ஊர்மக்கள், ஒவ்வொருவரையும் இனம் பார்த்தனர். தந்தை யாரென்று அறிய முடியவில்லை. சில மாதங்களிலேயே குழந்தையும் இறந்து விட்டது. குழந்தை இறந்தது கூட தெரியாமல் பேதையாக திரிகிறாள்.

"பிறந்த மேனியாக மீண்டும் நிறைமாத கர்ப்பிணியாய் வயிற்றைத் தள்ளி கொண்டு அந்தக் "கோட்டிக்காரி" ஸ்தனங்கள் ஆட ஒரு ஆணைப் போல் கைகளை முன்னும் பின்னும் வீசிக் கொண்டு திட்திட் என்று பூமி அதிர அந்தக் கிராமத்தின் நடுத்தெருவே நடந்து சென்று கொண்டிருந்தாள்"[6] என்று கி.ராஜநாராயணன் கதையை முடிக்கிறார். இறுதி வரை பேச்சி பேதையாக இருப்பதை அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். ஆண்கள் பெண்களை போகப் பொருளாகவே இன்று வரை எண்ணுகிறார்கள். பேதையான பேச்சியைக் கூட விட்டு வைக்காத சமூகத்தை இக்கதை மூலம் சாடுகிறார்.

முடிவுரை

பெண்ணியம் ஆணுக்கு எதிரானதோ, ஆணை ஒதுக்கியதோ அன்று. அதற்கு மாறாக ஆணுக்குத் துணைபுரிவது என்பதை கன்னிமை கதையும், வேலை - வேலையே வாழ்க்கை கதையும் தெளிவுபடுத்துகிறது. பேதையான பெண்ணை இழிவுப்படுத்தும் சமுதாயம் மாற வேண்டும். பெண்மையை போற்றுவோம்.

அடிக்குறிப்புகள்

1. சி.என்.குமாரசாமி, பெண்ணிய நோக்கில் பாரதி ப.4
2. இரா.பிரேமா, பெண்ணியம் அணுகு முறைகள் பக்-17
3. மேலது பக்-18
4. கி.ராஜநாராயணன், கன்னிமை பக்-80
5. கி.ராஜநாராயணன், வேலை வேலையே வாழ்க்கை பக்-98
6. கி.ராஜநாராயணன், வேலை வேலையே வாழ்க்கை பக்-98
7. கி.ராஜநாராயணன், பேதை பக்-51

துணைநூற் பட்டியல்

1. முனைவர் செ.சாரதாம்பாள், பெண்ணிய உளப்பகுப்பாய்வும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு 2005.
2. ச.முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், முதற்பதிப்பு 2017.
3. முனைவர் இரா.ரெங்கம்மாள், முனைவர் சி.வாசுகி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், அறிவுப் பதிப்பகம், முதற்பதிப்பு - 2005.